**R 4752 (page 35)** தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்

# வாட்ச் டவரிலிருந்து ஒரு பார்வை

# VIEWS FROM THE WATCH TOWER

## *அறுவைசிகிச்சை மூலம் சீர்த்திருத்தம்*

"அறுவைசிகிச்சையினால் நிகழும் அற்புதங்களானது, தொடர்ந்து பெருகிக்கொண்டு வருகின்றது மற்றும் அறுவைசிகிச்சைகளானது மனரீதியான மற்றும் ஒழுக்க ரீதியான குணமாக்குதலைக் கொண்டுவந்துள்ளது போன்ற உபகாரத்தினை, அறிவியலானது வேறு எங்கும் கொண்டுவரவில்லை. தலையில் அறுவைசிகிச்சைப்பண்ணி மூளை அமைப்பிலுள்ள சில சிறு பள்ளங்களை/புடைப்புகளை நீக்குதல் அல்லது மண்டை ஓட்டினைத் திறப்பதன் வாயிலாக மூளைக்கு விரிவான இடம் உண்டாக்கிக் கொடுத்தல் - என்பவைகளினால் மந்த நிலைமையிலும், துன்மார்க்க நிலைமையிலுமுள்ள சிறுவர்கள், இயல்பான மனம் மற்றும் ஒழுக்க நிலைமைகளை அடைந்து, வாழ்க்கையில் மீண்டும் நல்வாய்ப்பினை அடைந்துள்ளதான அநேகம் சந்தர்ப்பங்கள் பற்றின தகவல்கள் அவ்வப்போது வந்துகொண்டு இருக்கின்றது.

எட்வட் இ. கிறிமெல் என்பவன், 14-வயதுள்ளவனாக இருக்கையில், கம்பினால் தலையில் அடிவாங்கியுள்ளான் மற்றும் இதனால் மண்டைஓட்டில் முறிவு ஏற்பட்டு, பள்ளம்/புடைப்பு ஒன்றும் ஏற்பட்டுள்ளது. அவனது பெற்றோர்கள் இதற்கு எந்தக் கவனமும் காட்டிடவில்லை; ஆனால் சிறுவன் வளர்ந்தபோது அவ்வப்போது பாதகம்பண்ணும் குணங்களை (criminal tendencies) வெளிப்படுத்திக்கொண்டிருந்தான். அவன் பள்ளியில் அவ்வளவாய்ப் படிப்பில் நாட்டம் காட்டவில்லை மற்றும் தீமைச் செய்பவனாய் இருந்துவந்தான் மற்றும் அடிக்கடி காவல்துறையின் கவனத்திற்கு வந்தவனாய் இருந்தான். சிறைச்சாலையில் மூன்று வருஷங்கள் இருந்துவந்த பின்னரும், அவன் கைதுச் செய்யப்பட்டான் மற்றும் மோசடி புரிந்ததாக விசாரிக்கப்பட்டான். தவறு செய்தது எதையும் அவன் மறுக்கவில்லை மற்றும் அவனை விசாரித்தவர்கள், குற்றம்புரிவதற்கான அவனது மன உணர்வுகள், தலையில் அவனுக்கு ஏற்பட்ட காயங்களுடைய விளைவே என்று நம்பினார்கள்.

### மூளையின் மீதான அழுத்தத்தை விடுவித்தபோது, மனுஷனுடைய நடத்தை மாறினது

அவன் சார்பில் விசாரித்தவர்களால் முன்வைக்கப்பட்ட இக்கூற்றுகள் மீது நீதிபதி நம்பிக்கை வைக்காமல், அவனைக் கைத்தேர்ந்த குற்றவாளியாகவும், சமுகத்திற்கு ஆபத்தானவனாகவும் கருதி, டென்மோராவிலுள்ள சிறைச்சாலையில் தண்டனை அனுபவிக்கும்படிக்குத் தீர்ப்பிட்டார். தான் ஒரு நல்ல வாழ்க்கை வாழ விரும்புவதாகவும் மற்றும் தனக்குத் தவறு செய்யச் சந்தர்ப்பங்கள் கிடைக்குமானால், தன்னால் தவறு செய்திடுவதற்கான வாய்ப்பினைத் தவிர்த்திட முடியவில்லை என்பதாகவும் கூறி, தனக்கு அறுவைசிகிச்சைப் பண்ணித்தரவும் வேண்டி, அவன் சிறைச்சாலை அறுவைசிகிச்சை நிபுணரிடம் கெஞ்சினான். தொடர்ந்து குற்றமே செய்துகொண்டிருப்பதற்குப் பதிலாக, மரணத்தை விரும்புவதாகவும், தான் மரணத்திற்குப் பாத்திரவானாக இருப்பதையும் தெரிவித்தான். இறுதியாக அவன் போஸ்டன் நாட்டின் பிரசித்திப்பெற்ற அறுவைசிகிச்சை நிபுணரின் கவனத்தை ஈர்க்கப்பெற்றான் மற்றும் அவர் அறுவைசிகிச்சைப்பண்ணி, மூளை மீதிருந்த அழுத்தங்களை விடுவித்து, அம்மனுஷனுடைய எண்ணங்கள் மற்றும் செயல்பாடுகளுக்கான முழு இயல்பையும் மாற்றிப் போட்டார் மற்றும் அறுவைசிகிச்சைக்கு முன்னதாகக் காணப்பட்ட மிகவும் கபடுள்ள மற்றும் குற்றம்புரியும் இயல்புகளிலிருந்து விடுபட்டு, அவன் அனைவருக்கும் முன்பாக அதுமுதற்கொண்டு, உயர்பண்புணர்வுகளுள்ள, நல்லொழுக்கமுள்ள மனுஷனாக மாறிக் காணப்பட்டான்.

மூக்கிலிருந்தும், தொண்டையிலிருந்தும் சதைகளையும், மற்ற வளர்ச்சிகளையும் அறுவைசிகிச்சையின் மூலம் அப்புறப்படுத்துவதினால் சரியாய்ச் சுவாசிக்க முடியும் நிலைமை உண்டாகும் காரணத்தினால், மந்தமான அநேகம் பிள்ளைகள், சுறுசுறுப்பான, அறிவுள்ள பிள்ளைகளாக மாறியுள்ளனர். இயல்புக்கு மாறான சரீர அமைப்புகள் வாயிலாகவே பொதுவாகக்

குற்றம்புரிதல் நிகழ்கின்றது; இயல்புக்கு மாறான நிலைமைகள் இருப்பதை அறியாமல் இருப்பதன் விளைவே, அநேகமாக மந்தத் தன்மையாகும்" - *Plattsburg Sentinel* (செய்திதாள்)

* * * *

ஒருவேளை மண்டையோட்டில் ஏற்படும் விபத்துக்கள் நல்லொழுக்க சீர்க்கேடுகளை உண்டுபண்ண முடியுமானால், மூளையினுடைய வடிவமானது பெரிதும் முன்னோர் வழியினால் (heredity) - அதிலும் குறிப்பாகத் தாயினால் பெரிதும் தாக்கத்திற்குள்ளாகும் என்பதை யார்தான்

**R4752 : page 36**

மறுக்க முடியும்? இது "இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" (சங்கீதம் 51:5) என்னும் வேதவாக்கிய வார்த்தைக்கு இசைவாகவே உள்ளது.

அப்படியானால் குழந்தையினுடைய சரீர பலத்திற்கும், ஆற்றலுக்கும் அடுத்த விஷயங்களில் தகப்பனுக்கு அதிக பங்குள்ளது என்பதை யார்தான் மறுக்கக்கூடும்? இன்னுமாகத் தகப்பனானவர் கர்ப்பக்காலப்பகுதிகளில், தாயானவளின் சுற்றுச் சூழ்நிலைமைகள் மற்றும் மனதினுடைய நிலைமைகளின் விஷயத்தில் பெரிதும் பொறுப்புடையவராய் இருக்கின்றார். அம்மாதிரியான காலங்களில் யார் ஒருவரிடமிருந்தும் அநியாயமான, கடுமையான, கொடுமையான வார்த்தைகள் வருவது என்பது, அதுவும் குறிப்பாகக் கணவனிடமிருந்து வருவது என்பது தாயினுடைய மனதில் - அவள் சுமக்கும் குழந்தையினிடத்தில் பதியும் அளவுக்குள்ள வருத்தமுள்ள எண்ணங்கள், சோகமுள்ள எண்ணங்கள், கோபம், பகைமை முதலானவைகள் எழும்பிவிடும்.

பெலவீனர்களையும், மனுஷீகத்தினுடைய தீய ஒழுக்கங்களையும் காண்கையில், மற்ற எல்லாரையும்விடப் பெற்றோர்களே அதிகம் தயவாய்க் காணப்பட வேண்டும்; அனைவருமே கொஞ்சம் அனுதாபம் கொண்டிருக்க வேண்டும். சட்டங்களையும், ஒழுங்குமுறைகளையும் அமல்படுத்துகையில், ஒட்டுமொத்த மனுக்குலத்தினுடைய குடும்பத்தில், பாவம் மற்றும் மரணத்தினுடைய ஆளுகை தொடர்ந்துகொண்டிருக்கின்றது என்பதை நினைவில்கொள்வோமாக. நீதியைச் கட்டிக்காப்பதற்கும் மற்றும் மேல்கூறப்பட்டுள்ள விஷயத்தில் நம்மைக் காட்டிலும் அதிகம் சிரமத்திற்குள் காணப்படுகிறவர்களுக்கு உதவிச் செய்வதற்கும் நம்மால் முடிந்த அனைத்தையும் அனுதாபத்தோடு செய்வோமாக.

---

See more Books & Articles at www.foodfornewcreature.com